**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.19/2022** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W. 13** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | ஜெயலட்சுமணன் | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.10.2025**

**எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை**

நான் மேலமாத்தூரில் குடியிருக்கிறேன். மளிகை கடை நடந்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். வழக்கில் இறந்துபோன கருப்பயைா என் பெரியப்பா ஆவார். 22.01.2021ம் தேதி இரவு 11.30 மணியளவில் என்பெரியப்பாவுக்கும், எதிரிக்கும் ஏற்கனவே சொத்து கேட்ட பிரச்சனை சம்மந்தமாக தகராறு ஏற்பட்டுள்ளது. தோட்டத்தில் இருந்த மரங்களை விற்று எதிரி செலவு செய்துவிட்டார். இருவருக்கும் வாய்தகராறு நடந்து சண்டை ஆகிவுள்ளது. என்பெரியப்பா இதற்கு மேல் பிள்ளைகளை வைத்து கொண்டு நீ இருக்ககூடாது, இடத்தை காலி செய்து போ என்று திட்டிவிட்டார். அதற்கு நீ என்னடா ஏன் இடத்தில் உட்கார்ந்து கொண்டு கேட்பது என்று சொல்லி கத்தியால் குத்தபோயிட்டார். இதை பார்த்த என்அப்பா பழனிசாமி இருவருக்கும் இடையில் விலக்க சென்றபோது நீ என்னடா இடையில் விலக்க வருவது என்று சொல்லி அவரை கத்தியால் 3 இடங்களில் குத்திவிட்டார். கருப்பயைாவையும் வயிற்றில் எதிரி குத்திவிட்டார். குத்தியபின்னர் வெளியில் போய்விடலாம் என்று

இருவரும் வெளியில் ஓடியுள்ளார்கள். என்அப்பா மற்றும் கரம்பியம் வந்துவிட்டார் . என்பெரியப்பா வரவில்லை. அங்கு சின்னதுரையிடம் தகவல் சொல்லி அவர் மேலமாத்தூருக்கு வந்து எங்களை எழுப்பி தகவல் சொன்னார். நானும், என்அம்மாவும் பைக்கில் கரம்பியம் வந்தோம். என்அப்பாவை பார்த்தபோது 3 இடங்களில் கத்திகுத்து இருந்ததால் ஆம்புலன்சுக்கு போன் செய்தேன். என்பெரியப்பாவை பார்க்க காட்டிற்கு போனோம். அவரை கண்டுபிடிக்கமுடியவில்லை. ஆம்புலன்ஸ் உள்ளே வரமுடியவில்லை. பின்னர் டார்ச் அடித்து பார்தது அவரை பார்த்தோம். அவர் பேச்சு மூச்சு இல்லாமல் ஓடையில் இருந்தார். பின்னர் நானும், சின்னதுரையும் அவரை ரோட்டிற்கு தூக்கி கொண்டு வந்தோம். அவர் இறந்துவிட்டார். பின்னர் ஆம்புலன்சில் ஏற்றி சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

போலிசார் என்னை இறந்தமறுநாள் விசாரித்தார்கள். நான் தற்போது முதல்விசாரணையில் சொன்ன விவரத்தை தான் போலிசார் விசாரிக்கும்போது சொன்னேன். மரத்தை எதிரி வெட்டி விற்றுவிட்டதாக போலிசார் விசாரணையில் சொன்னேன். போலிசார் விசாரணையில் ஆம்புலன்சுக்கு நான் தான்போன் செய்து வரசொன்னேனா என்று தெரியவில்லை. சின்னதுரை மேலமாத்தூருக்கு வந்து எத்தனை மணிக்கு எங்களிடம் தகவல் சொன்னார் என்று போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை. மோட்டார் சைக்கிளில் கரம்பியம் சென்றதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. டார்ச் லைட்டை அடித்துபார்த்து இறந்துபோன கருப்பயாவை நானும், சின்னதுரையும் ரோட்டிற்கு தூக்கிவந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை. மேலமாத்தூருக்கும், சம்பவஇடத்திற்கும் இடையில் சுமார் 1 1/2 கி.மீ தூரம் இருக்கும். நான் அன்று மேலமாத்தூரில் உள்ள எங்கள் ஓட்டலில் தான் இருந்தேன். என்பாட்டி எனக்கும், எதிரிக்கும் பாட்டி செட்டில்மெண்ட் பத்திரம் எழுதிவைத்துள்ளார். செட்டில்மெண்ட்ல் எழுதிவைத்துள்ள சொத்து சம்மந்தமாக தான் பிரச்சனை. எனக்கு வழக்கு சம்பவம் நேரடியாக தெரியாது.

என்அப்பா தான் இந்த வழக்கில் புகார்தாரர். நான், என்அப்பா சேர்ந்து எதிரியின் சொத்தை அபகரிக்க வேண்டி எதிரிக்கு சம்மந்தம் இல்லாத சம்பவம் குறித்து என்அப்பா கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சின்னதுரை என்னிடம் தகவல் எதுவும்சொல்லவில்லை என்றும், நான் சம்பவஇடம் செல்லவில்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.